(ஐப்பசி 14)  2023 அக்டோபர் 31-ம் தேதி செவ்வாய்கிழமை

காலை 11.00 மணிக்கு

திருவாரூர் நகர் மன்ற சாதாரணக் கூட்டம் நடைபெறும் அச்சமயம்

கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்

முன்னிலை: திருமதி.செ.புவனப்பிரியா செந்தில், நகரமன்ற தலைவர்

| பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண் |
|---|---|
| பொருள் எண் : 1<br>நகரமன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>திருவாரூர் நகராட்சிக்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-24 ன் கீழ் காய்கறி , பழச்சந்தை அமைக்கும் பணி, மீன் மற்றும் இறைச்சி சந்தை அமைக்கும் பணி பழைய பேருந்து நிலையத்தினை மேம்படுத்தும் பணி , மூலதன மானிய நிதி திட்டம் 2023-24 ன் கீழ் மடப்புரம் ஓடம்போக்கி ஆற்றின் குறுக்கே புதிய உயர்மட்ட பாலம் அமைக்கும் பணி, TNCRUDP 2023-24 ன் கீழ் திருவாரூர் நகராட்சியில் விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தும் பணிகளுக்கு அரசாணை வெளியிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் அதனை பெற்றுத்தந்த மாண்புமிகு நகராட்சி நிர்வாகதுறை அமைச்சர் மற்றும் திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் நகர்மன்ற தலைவர், துணைத்தலைவர் மற்றும் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள் சார்பாக நன்றி தெரிவிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.<br>வார்டு எண்.9 மடவடியார் தெருவில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன். மும்மூர்திகள் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன். | 375)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 2<br>நகரமன்ற துணை தலைவர் திருமதி.ச.அகிலாசந்திரசேகர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>வாசன் நகர் சாய்பாபா கோவில் அருகில் கல்வெட்டு அமைத்து தரவேண்டுதல். செங்கழுநீர் நகரில் மின்விளக்கு போஸ்ட் அமைத்து தரவேண்டுதல். பாதாளசாக்கடை (யு.ஜி 7) மேன்ஹோல் காந்தி நகரில் அடிக்கடி கசிவு அதற்கு நிரந்தர தீர்வு தருமாறு வேண்டுதல்.நெகிழி (பிளாஸ்டிக்பை)பயன்பாடு அதிகமாக உள்ளது , நிர்வாகம் கடுமையான அபராதம் விதிக்க வேண்டுதல். முடுக்குத் தெரு சந்தில் கல்வெட்டு அமைத்துதர வேண்டுதல்.சாலைகளில் விபத்து ஏற்படுத்தும்வண்ணம் சுற்றித்திரியும் கால்நடைகளை கட்டுப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | 376)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 3<br>1 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எஸ்.கலியபெருமாள் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>ஏ.என்.ஆர் வீடு பின்புறம் முதல் மு.க.முத்து வீடு வரை செட்டிக்குளம் வடிகாலில் இருபுறமும் சுவர் எழுப்பிட வேண்டும். இராமநாதன் நகரில் பூங்கா அமைத்திட வேண்டும். நியூ ஹவுஸிங் யூனிட் குளத்தினை மேம்படுத்திட வேண்டும். நமக்கு நாமே திட்டத்தின் கீழ் தேவைப்படும் இடங்களில் கண்காணிப்பு கேமரா அமைத்திட வேண்டும். | 377)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 4<br>2 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.க.மலர்விழி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>ஈ.வீ.எஸ் நகரில் உள்ள நகராட்சி படிப்பகத்தை புதுபித்து தர வேண்டுதல். புதுத்தெருவில் உள்ள சமுதாய கூடத்தினை சீர்செய்திட வேண்டுதல். ஈ.வி.எஸ் நகரில் உள்ள சுக்காணாறின் கரைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி பூங்கா அமைத்திட வேண்டும். நமக்கு நாமே திட்டத்தின் கீழ் தேவைப்படும் இடங்களில் கண்காணிப்பு கேமரா அமைத்திட வேண்டும். | 378)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 5<br>3 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ம.கஸ்தூரி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>கீழகொத்த தெரு மற்றும் வடக்கு கொத்த தெரு ஆகிய இரண்டு சாலைகளும் மிகவும் சேதமடைந்து உள்ளதால் மழை நேரத்தில் சிரமமாக உள்ளது. சாலையை புதுபித்து தார்சாலை அமைத்து தர வேண்டும். சுடுகாட்டிற்கு போகும் சாலையை இருபுறமும் உள்ள குப்பைகளை அகற்றி சாலையை சுத்தம் செய்து தரவேண்டும். தெற்கு கொத்த தெரு பொது கழிப்பிடம் அருகே சிறுபாலம் அமைத்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன். 3வது வார்டில் ஐந்து இடங்களில் மின்விளக்குகள் அமைத்துதரவேண்டும். | 379)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 6<br>4 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஜெ.பெனாசிர் ஜாஸ்மின் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>எனது வார்டுக்கு உட்பட்ட துக்கான் நகரில் உள்ள நகராட்சி இடத்தில் மாணவர்களுக்கு பயனுள்ள வகையில் நூலகம் அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். எனது வார்டில் அதிகப்படியான நாய்கள் தொல்லை இருகின்றது.எனவே அதனை கட்டுப்படுத்திட கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதற்கான இடங்களை நகராட்சி ஏற்பாடு செய்து கால்நடை மருத்துவ துறையுடன் இணைந்து | 380)<br>தீர்மானிக்கப்பட்டது |

| | |
|---|---|
| செயல்படும்படி கேட்டுக்கொள்கிறேன். | |
| பொருள் எண் : 7<br>6 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.பா.ஐஸ்வர்யா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>இராமகே சாலையிலுள்ள தொடக்கப்பள்ளியில் பயிலும் சுமார் 35 மாணவர்களுக்கு இருக்கை வசதி அமைத்திட கேட்டுக்கொள்கிறேன். இராமகே சாலையில் உள்ள மக்கள் பயன்பாட்டில் உள்ள கழிப்பிடம் சேதமடைந்துள்ளதால் அதனை அகற்றிவிட்டு புதிதாக அமைத்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன். | 381)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 8<br>7 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.கோ.வரதராஜன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>தென்றல் நகர் நூலகம் வாயிலில் தரைத்தளம் அமைத்து கூரை அமைத்து தரும்படி கேட்டுக்கொள்கிறோம். நல்லப்பா நகர் திருப்பதி வளாகம் பகுதியில் சாலை அமைத்து தர வேண்டும் குடிநீர் குழாய் பதித்து தர வேண்டும், பாதாளசாக்கடை இணைப்பு குழாய் அமைக்க வேண்டும், மின் விளக்குகள் அமைத்துதர வேண்டும், தென்றல் நகர் பூங்காவில் போர்வெல் இயங்கவில்லை அதை சரி செய்து அதற்கு மின் இணைப்பு வழங்கிட வேண்டும். புதிதாக கரைகள் அமைத்து வேலை செய்யப்படும் செட்டிகுளம் அதற்கு இணைப்பு சாலை அமைத்து படித்துறை அமைத்து தரப்பட வேண்டும். தென்றல் நகர் நேரு சாலையில் உள்ள ஆக்கிரமிப்பு அகற்றி கொடுக்க வேண்டும். தென்றல் நகர் விளையாட்டு மைதானத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்து தர வேண்டும். ஸ்ரீதேவி நகர் கம்பர்தெரு இணைப்பில் உள்ள மரத்தை வெட்டி ஒழுங்குபடுத்தி தர வேண்டும். பி வாய்காலுக்கு புதிய பாலம் அமைத்து அகலப்படுத்தி தர வேண்டும். காகித காரத் தெருவில் மினி போர்வெல் அமைத்து கொடுக்கப்பட வேண்டும். காமாட்சி அம்மன் கோவில் தெருவில் சிமெண்ட் சாலை அமைத்து தரப்பட வேண்டும். கம்பர் தெரு தோப்புத் தெரு பகுதிகளுக்கு சமுதாயக் கூடங்களை சீரமைத்து தரப்பட வேண்டும். தோப்புத் தெருவில் உள்ள மார்ட் பைப்பு புதிதாக மாற்றி சீர் செய்து தரப்பட வேண்டும். | 382)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 9<br>13 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சி.உமாமகேஸ்வரி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>மானத்தியார் தெருவில் உள்ள நகராட்சி பொது கழிப்பிடத்தை நிரந்தரமாக மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும். துர்கை சன்னதி தெருவில் பாதாளச்சாக்கடை இணைப்பை ஏற்படுத்தி தரவேண்டும். VST தெரு GRT வீடு அருகில் மூன்று சாலை சந்திப்பிலும் VST தெரு தெற்கு வீதி இணைப்பு சாலை முடிவிலும் குமரகோவில் தெரு கீழவடம்போக்கி தெரு இணைப்பு சாலையிலும் வேகத்தடை அமைத்துதர வேண்டும். வார்டில் உள்ள அனைத்து மழைநீர் வடிகால்களையும் சுத்தம் செய்து சீரமைத்து தரவேண்டும். தெற்கு வீதி கீழவீதி இணைப்பு சாலையிலும் மானத்தியார் தெரு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் அருகிலும் புதிய கல்வெட்டு அமைத்துதர வேண்டும். மானந்தியார் தெருவில் உள்ள பொது கழிப்பிடத்துக்கு புதிதாக போர் அமைத்து தர வேண்டும். | 383)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 10<br>15 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.சி.மூர்த்தி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>வன்மீகபுரம் காமராஜர் தெருவில் உள்ள பொதுக்கழிவறை மிகவும் பழுதடைந்து மோசமாக உள்ளதால் மக்கள் அனைவரும் மிகவும் இன்னல்களுக்கு ஆளாகின்றனர் ஆகையால் கழிவறையை சீரமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ரயில்வே காலணி கீழ்புறம் உள்ள மக்களுக்கு குடிநீர் குழாய் பைப் வசதி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். ஜெகஜீவன்ராம் தெருவிற்கு குடிநீர் குழாய் பைப் வசதி அமைத்து தருமாறு கேட்டுககொள்கிறேன். திலகர் 2வது தெருவில் குடிநீர் தொட்டி இரண்டு அமைத்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். | 384)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 11<br>16 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.சு.நா.அசோகன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>பெருமாள் கோவில் சன்னதி தெருவில் இரண்டு புதிய மின்கம்பங்கள் அமைத்து மின் விளக்குகள் பொருத்துதருமாறு கேட்டுக்கொள்கிறோன். முக்திவிநாயகர் தென்கரையில் மழைநீர் வடிகால் அமைத்து கல்வெர்ட் ஒன்று அமைத்துதர வேண்டுகிறேன். | 385)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 12<br>17 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சி.சசிகலா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>கண்ணார தெரு மற்றும் முடுக்கு தெருவில் புதிய மின் கம்பம் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன். | 386)<br>தீர்மானிக்கப்பட்டது |
| | |

| | |
|---|---|
| பொருள் எண் : 13<br>23 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ச.கருணாநிதி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>கிடாரங்கொண்டான் திரு.வி.க.கல்லூரி எதிரில் உள்ள தற்போது ஓ.என்.ஜி.சி ரோடு என்று அழைக்கப்படும் தெருவிற்கு மண்ணின் மைந்தர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை போற்றும் வகையில் கலைஞர் நகர் என பெயர் சூட்டி தீர்மானம் நிறைவேற்றி பெயர் பலகை அமைத்து தர வேண்டுதல்.வார்டு முழுவதும் குடிநீர் குழாய் பதிக்கும் பணியில் கட்டளைத்தோப்பு பகுதி விடுபட்டு உள்ளது.சுமார் 70 குடும்பங்கள் வசிக்கும் அந்த பகுதிக்கும் குடிநீர் குழாய் பதித்து தர வேண்டும்.எங்களது வார்டில் உள்ள ரேசன் கடை தற்போது சமுதாய கூடத்தில் இயங்கி வருகிறது இதனால் சமுதாய கூடத்தை மக்கள் பயன்படுத்த முடியாத சூழ்நிலை உள்ளது.ஆகவே ரேசன் கடைக்கு புதிய கட்டிடம் கட்டிதர வேண்டும்.கிடாரங்கொண்டானில் மக்கள் பயன்பாட்டிற்கு பொது கழிப்பிடம் கட்டி தர வேண்டும்.குடிநீர் குழாய் பதிக்கும்போது தோண்டப்பட்ட கான்க்ரீட் சாலைகளை உடனடியாக சரிசெய்து தர வேண்டும். | 387)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 14<br>25 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ஜெ.அய்யனார் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>அண்ணா சாலை ரயில்வே கீழ் பாலம் வடக்கு பக்க ரோட்டில் உள்ள 4 மின் கம்பங்களில் தெரு விளக்கு இல்லை. தெற்கு பக்க மின் கம்பங்களில் மின் விளக்குகளில் அனைத்து கம்பங்களிலும் எரிவதால் வடக்கு பக்க மின் கம்பங்களுக்கு புதிய மின் விளக்குகள் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன். பழைய தஞ்சை சாலையில் உள்ள மயானத்தில் மின் விளக்குகள் அமைத்திட கேட்டுக்கொள்கிறேன்.பழைய தஞ்சை சாலையில் உள்ள மயானத்தில் இறந்தவர்களின் உடலை எரிக்க புதைக்க வசூலிக்கப்படும் தொகையினை வரன்முறை செய்திட கேட்டுக்கொள்கிறேன். | 388)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 15<br>26 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.க.பாரதி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>பெரியமில் தெரு முதன்மை சாலைகளை புதிதாக அமைத்து தர வேண்டும். பெரியமில் தெரு சாலைகளில் விடுபட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்து தர வேண்டுகிறேன். ஆறுமுகம்தெருவில் மழை காலங்களில் தெருவில் மழைநீர் தேங்கி வீடுகளில் புகும் நிலையில் உள்ளது எனவே மழைநீர் வடியும் வகையில் வடிகால் அமைத்து தர வேண்டுகிறேன்.விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை உடன் அமைத்து தர வேண்டுகிறேன். பெரியமில் தெருவில் உள்ள அனைத்து சாலைகளையும் புதிதாக அமைத்து தர வேண்டுகிறேன். பெரியமில் தெரு மற்றும் ஆறுமுகம் தெருக்களில் ஐந்து இடங்களில் புதிய மின்கம்பம் அமைத்து தெருவிளக்கு பொருத்த வேண்டுகிறேன்.பெரியமில் தெருவில் கொசு தொல்லை உள்ளதால் கொசுவை ஒழிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.பெரியமில் தெருவில் வாய்காலில் சிறுபாலம் அமைத்து தர வேண்டுகிறேன். | 389)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 16<br>27 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.சி.தினேஷ்குமார் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>ஐ.பி கோவில் மேலத் தெரு – கே.டி.ஆர் எஸ்டேட் இணைப்புச் சாலையில் புதிதாக மூன்று மின்கம்பங்கள் அமைத்து தருதல். கே.டி.ஆர் எஸ்டேட் பகுதியில் பூங்கா அமைத்து தருதல். ஐ.பி கோவில் தெற்கு தெரு – ஆத்தாக்குளம் தூர்வாருதல். | 390)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 17<br>28 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.தி.கோமதி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>ஐ.பி கோவில் எதிரில் உள்ள சிறுமின்விசை மோட்டார் மற்றும் நீர் தொட்டியுடன் புதிதாக அமைக்கப்பட்ட மின் மீட்டர் – க்கு கதவுகள் அமைத்து தர கேட்டுக்கொள்கிறேன். ஐ.பி கோவில் குளத்தின் நடைபாதையில் நீர் தேங்காதவண்ணம் சரிசெய்திடவேண்டும்.வார்டு எண்.28 பகுதியில் உள்ள வடிகால்களில் ஆக்கிரமிப்புகளை அகற்றி தூர்வாரி சரிசெய்திட கேட்டுக்கொள்கிறேன்.எனது வார்டில் உள்ள அனைத்து பகுதிகளிலும் சேதமடைந்த சாலைகளை சீரமைத்திடவும் சாலையின் ஓரத்தினை சரிசெய்திட கேட்டுக்கொள்கிறேன்.எனது வார்டில் தெருவிளக்கு இல்லாத பகுதிகளில் தெருவிளக்கு அமைத்து தர கேட்டுக்கொள்கிறேன். | 391)<br>தீர்மானிக்கப்பட்டது |
| 392)பொருள் எண் : 18<br>29 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எஸ்.அன்வர் உசேன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>எனது வார்டில் மஞ்சக்கொல்லை தோப்பில் உள்ள நியாய விலை கடையில் பயனாளர்கள் பொருட்கள் வாங்குவதில் சிரமம் உள்ளதால் நியாய விலை கடைக்கு இரும்பு மேற்கூரை அமைத்து தர கேட்டுக்கொள்கிறேன். எனது வார்டில் உள்ள சின்ன மேட்டுப்பாளையம் மற்றும் பெரியார் மேட்டுப்பாளையத்தில் மழைநீர் வடிகால் அமைத்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.சின்ன மேட்டுப்பாளையத்தில் உள்ள நீர்தேக்க தொட்டியினை சரிசெய்து தர கேட்டுக்கொள்கிறேன். | 392)<br>தீர்மானிக்கப்பட்டது |
| பொருள் எண் : 19<br>30 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.சோ.புருஷோத்தமன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம் | |

கட்டபொம்மன் தெரு சந்தன கொல்லை பகுதியில் வசிக்கும் மக்கள் குடிநீர் ஆழ்துறை போர் தூர்ந்து போய் உள்ளதால் குடி தண்ணீர்காக 1 கி.மீ தூரம் சென்று தண்ணீர் எடுத்து வரவேண்டிய அவலநிலை உள்ளது. ஆகவே அதனை சரி செய்து தர வேண்டும்.கட்டபொம்மன் தெரு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேவர் பிளாக் சாலையோரம் மின் கம்பம் புதியதாக அமைத்து மின்விளக்கு அமைக்கவேண்டும். கிடாரம்கொண்டான், பெரியார் தெருவில் அமைந்துள்ள நூலக கட்டிடம், அங்கன்வாடி கட்டிட பழுதுகளை நீக்கி சரிசெய்தும், கழிவறை அமைத்து தர கேட்டுக்கொள்கிறேன்.

393)
தீர்மானிக்கப்பட்டது

---

பொருள் எண் : 20

திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண். **TN.50.K.9248 (Auto)** பழுதுகள் சரி செய்து பெறுவதற்கு அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் மற்றும் வெளியூர் ஆட்டோ கேரேஜ் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண் | வாகனம் எண். | விபரம் | SRI POWER ELECTRONICS KUMBAKONAM | RISHI MOTORS KUMBAKONAM | ESSAR AGENCIES KUMBAKONA M |
|---|---|---|---|---|---|
| 1 | **TN.50.K.9248 (Auto)** | பழுதுகள் சரி செய்தல் | ரூ.251800/- | ரூ.239470/- | ரூ.245800/- |

மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **RISHI MOTORS KUMBAKONAM** என்ற நிறுவனத்திடம் பழுதுகள் சரி செய்து கொள்ளவும் அதற்குரிய பில்பட்டியல் தொகை ரூ.239470/-வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது..

அலுவலக குறிப்பு : -

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **RISHI MOTORS KUMBAKONAM** என்ற நிறுவனத்திற்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கவும், மேலும் மேற்கண்ட நிறுவனத்தின் பில்பட்டியல் படி தொகை ரூ.239470/-வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 2935 /2022/எச்1

394)
அலுவலக குறிப்பு
அனுமதிக்கப்பட்டது

---

பொருள் எண் : 21

திருவாரூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பிறப்பு / இறப்பு சான்றிதழ் எடுக்கும் இயந்திரம் அடிக்கடி பழுது ஏற்படுவதால் பொது மக்களுக்கு பிறப்பு / இறப்பு சான்றிதழ் வழங்க மிகவும் சிரமமாக உள்ளதால் புதியதாக பிறப்பு / இறப்பு சான்றிதழ் எடுக்கும் இயந்திரம் வாங்க உள்ளூர் மற்றும் வெளியூர் ஒப்பந்ததாரர்களிடம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. விவரம் கீழ்வருமாறு

| PSM INFOTECH COMPUTERS ஒப்பந்ததாரர் திருவாரூர் | DIGITAL OFFICE TECHNOLOGIES ஒப்பந்ததாரர் திருவாரூர் | JP COPIERS AND SYSTEMS ஒப்பந்ததாரர் திருவாரூர் |
|---|---|---|
| ரூ.26,200/- | ரூ.26,600/- | ரூ.26,900/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி SM INFOTECH COMPUTERS ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு :-**</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி SM INFOTECH, COMPUTERS ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சிகள் விதி 1970 பிரிவு-15ன் கீழ் தொகை ரூ.26,200/- வழங்கலாம்.

ந.க.எண்.1490/2023/எச்1

395)
அலுவலக குறிப்
அனுமதிக்கப்பட்டது

| | |
|---|---|
| பொருள் எண்.22<br>திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் நோய் பரவுவதை தடுத்திடும் பொருட்டு பராமரிப்பு களப்பணிக்காக 300 வீடுகளுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் பணியமர்த்தி கொள்ள தலைமை செயலர் அவர்களின் அறிவுரை DO LETTER NO 34408/D1/2019-1 நாள் 10.07.2020 நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரை நாள் 06.03.2020 துணை இயக்குநர் சுகாதார பணிகள், திருவாரூர் அவர்களின் கடித ந.க.எண் 2172/2022அ2 நாள் 22.06.2022-ன்படி கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளதன் பேரில் நகர் மன்ற தீர்மான எண் 150 நாள் 29.07.2022 அனுமதி பெறப்பட்டதன் அடிப்படையில் 51 பணியாளர்களை 6 மாத காலத்திற்கு (01.07.2022 முதல் 30.06.2022 வரை) பணிமேற்கொள்ள Sri Ramachandra Service Trust, Mannargudi. என்ற நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கப்பட்ட நிலையில் மேற்படி பணிகாலம் முடிவடைவதால் (2022 - 2023 ஆம் ஆண்டு பொதுசுகாதாரப்பிரிவு இந்நகர்மன்ற தீர்மான எண்:30, நாள்:11.04.2022) மற்றும் (2023 - 2024 ஆம் ஆண்டு பொதுசுகாதாரப்பிரிவு இந்நகர்மன்ற தீர்மான எண் 307 நாள் 30.06.2023 டெங்கு தடுப்பு பணிக்காக தற்காலிக பணியாளர்களை நியமிக்க ரூ.50 இலட்சம் மன்ற அனுமதி பெற்றுள்ளது. மேலும் தற்போது துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், திருவாரூர் அவர்களின் கடித ந.க.எண்67/2021/அ2, நாள்:21.06.2023-ன்படி, 250 வீடுகளுக்கு ஒரு பணியாளர் என்ற அடிப்படையில் 20053-ற்கு குடியிருப்புகளுக்கு மொத்தம் 80 பணியாளர்கள் வீதம் பணியமர்த்தி கொள்ளவும், பொதுசுகாதார நலன் கருதியும், வடகிழக்கு பருவமழை முன்னிட்டும், இப்பணியின் அவசர அவசியம் கருதியும் பணி காலத்தினை 01.04.2023 முதல் 30.06.2023 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்ட பணிகாலம் முடிவடைந்த நிலையில் தற்போது மேலும் மூன்று மாத காலங்களுக்கு 01.07.2023 முதல் 30.09.2023 வரை பணிகள் மேற்கொள்ளவும், மேற்படி பணியினை 2023 - 2024 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் திருவாரூர் அவர்களின் தினக்கூலி ஊதிய பட்டியலின்படி ஊதியம் வழங்கவும் மற்றும் பணி உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்ககப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் 2023 - 2024 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் திருவாரூர் அவர்களின் தினக்கூலி ஊதிய பட்டியலின்படி ஊதியம் வழங்கவும் 01.07.2023 முதல் 30.09.2023 வரை பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் : 1147/2022/எச்1 | 396)<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.23<br>திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் நோய் பரவுவதை தடுத்திடும் பொருட்டு 2023 - 2024 ஆம் ஆண்டு பொதுசுகாதாரப்பிரிவு இந்நகர்மன்ற தீர்மான எண் 307 நாள் 30.06.2023 டெங்கு தடுப்பு பணிக்காக தற்காலிக பணியாளர்களை நியமிக்க ரூ.50 இலட்சம் மன்ற அனுமதி பெற்றுள்ளது. மேலும் தற்போது துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், திருவாரூர் அவர்களின் கடித ந.க.எண்67/2021/அ2, நாள்.21.06.2023-ன்படி, 250 வீடுகளுக்கு ஒரு பணியாளர் என்ற அடிப்படையில் 20053-ற்கு குடியிருப்புகளுக்கு மொத்தம் 80 பணியாளர்கள் வீதம் பணியமர்த்தி கொள்ளவும், பொதுசுகாதார நலன் கருதியும், வடகிழக்கு பருவமழை முன்னிட்டும், இப்பணியின் அவசர அவசியம் கருதியும் பணி காலத்தினை 01.04.2023 முதல் 30.06.2023 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்ட பணிகாலம் முடிவடைந்த நிலையில் மேலும் 01.07.2023 முதல் 30.09.2023 வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டு பணிகாலம் முடிவடைந்த நிலையில், இப்பணியின் அவசர அவசியம் கருதியும் மேலும் மூன்று மாத காலத்திற்கு 01.10.2023 முதல் 31.12.2023 வரை பணிகள் மேற்கொள்ளவும், மேற்படி பணியினை மாவட்ட ஆட்சியர் திருவாரூர் அவர்களின் தினக்கூலி ஊதிய பட்டியலின்படி ஊதியம் வழங்கவும் மற்றும் பணி உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>1, மன்றம் அனுமதிக்கலாம்.<br>2,அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் மாவட்ட ஆட்சியர் திருவாரூர் அவர்களின் தினக்கூலி ஊதிய பட்டியலின்படி ஊதியம் வழங்கவும் 01.10.2023 முதல் 31.12.2023 வரை பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் : 1147/2022/எச்1 | 397)<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.24<br>திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.16 நாகை - தஞ்சை தேசிய நெடுஞ்சாலை மற்றும் பெருமாள் மேலவீதி சாலையினை இணைக்கும் ஓடம்போக்கி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள மடப்புரம் சிறிய பாலத்தினை அகலப்படுத்துவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் தனிப்பிரிவு மனுவில் கோரப்பட்டுள்ளதை தொடர்ந்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர், நகர் மன்றத்தலைவர், நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோருடன் 27.08.2023 அன்று நேராய்வு செய்து மடப்புரம் ஒத்த பாலம் அருகில் புதிய பாலம் அமைக்க கலந்தாலோசிக்கப்பட்டது. அதன்படி | 398)<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும் மற்றும் மண் பரிசோதனை, கட்டிட வடிவமைப்பு பெற ஆகும் உத்தேச செலவினம் ரூ.30.00 இலட்சத்திற்கு மற்றும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணிகளின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கோப்பின் மீது மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.768/2022/இ1 | |
| பொருள் எண்.25<br>நகர்ப்புற வளர்ச்சி 20.10.2016 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட மனைபிரிவில் அமையும் விற்கப்பட்ட மற்றும் விற்கபடாத அனைத்து மனை மற்றும் மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த ஏற்கனவே வெளியிடப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளுக்கு உட்பட்டு எவ்வித மாற்றமும் இல்லாமல் மனை வரன்முறை செய்து கொள்ள 29.02.2024 வரை விண்ணப்பிக்க காலம் நீட்டிப்பு செய்து வரப்பெற்ற வீட்டுவசதி மற்றும் நர்ப்புற வளர்ச்சி (நவ4(1) ) துறை அரசாணை (நிலை) எண்.118 நாள்.04.08.2023 மன்றத்தின் பார்வைக்கு பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>ந.க.எண்.2267/2023/எப்1<br>அலுவலக குறிப்பு : மன்றம் பதிவு செய்யலாம். | 399)<br>பார்வையிட்டு<br>பதிவு செய்யப்பட்டது |
| பொருள் எண்.26<br>இந்நகராட்சியில் உதவியாளராக பணிபுரிந்து 31.03.2018 வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்ற திருமதி.ஜி.ஆச்சியம்மாள் என்பவர் ஓய்வூதியம் அனுமதிக்ககோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு WPNo.1777/2020ன் மீது திருவாரூர் நகராட்சி சார்பாக ஆஜரான அரசு கூடுதல் வழக்கறிஞர் திரு.டி.செழியன் என்பவருக்கு வழக்கு மற்றும் வழக்கறிஞர் கட்டணம் ரூ.25000/- வழங்கிடவும் அதற்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>ந.க.எண்.818/2020/அ3<br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. நகரமன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்ஒப்புதல் பெற்று செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். | 400)<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.27<br>இந்நகராட்சி பணியாளர்களின் சேமநலநிதி கணக்குகள் மீது வட்டி கணக்கீடு செய்வதற்கு விலைப்புள்ளிகள் வரப்பெற்றதில் குறைந்த ஒப்பந்த புள்ளி கோரிய Sanjey Solutions நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதில் பணியினை முடித்து அந்நிறுவனத்திலிருந்து ரூ.2,89,400-க்கான பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல் தொகை வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :-<br>மன்றம் ஒப்புதல் வழங்கலாம். | 401)<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.28<br>திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.25ல் சர்வே தொகுதி எண்.3 பகுதி எண்.17 நகரளவை எண்.597/1B, 579/1, 579/2ல் 2.79 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையத்தினை மேம்படுத்தும் பணிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை எண்.34/2023-24ன் படி அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் ஆகியோர்களால் கள ஆய்வுசெய்யப்பட்டு புதிய நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து வளாகம் அமைப்பது என கலந்தாலோசிக்கப்பட்டது. அதன்படி விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும் மற்றும் மண் பரிசோதனை, கட்டிட வடிவமைப்பு பெற ஆகும் உத்தேச செலவினம் ரூ.45.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்காணும் பணிகளின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கோப்பின் மீது மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். 1396/2023/இ1 | 402)<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.29<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் அம்மையப்பன் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் இதர மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மோட்டாரை இயக்க இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறையில் | |

| | |
|---|---|
| ஒப்பந்த அடிப்படையில் Out Source முறையில் பணியாளர்களை அமர்த்தி மேற்கொள்ள Lr.No.539/2005/F3 நாள்.28.01.2005ல் அனுமதிக்கப்பட்டுள்ளதன்படி பொதுப்பணிதுறையின் 2022-23 விலை விகிதத்தின்படி Electrician Grade – II நிலையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க மன்ற தீர்மான எண்.257 நாள்.08.03.2023ல் அனுமதிக்கப்பட்டு 30.06.2023 உடன் முடிவடைவதால் ஒப்பந்தப்புள்ளி கோர போதிய அவகாசம் இல்லாததால் 01.07.2023 முதல் 30.09.2023 வரை நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்து ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.778.00+18% ஜிஎஸ்டி உட்பட ரூ.918.04 வீதம் 6 நபர்கள் கொண்டு பணி மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.512267/- மட்டும் (பிடித்தங்கள் உட்பட) இந்நகராட்சியின் குடிநீர் திட்டநிதி / பொதுநிதியிலிருந்து தொகை வழங்கிடவும் மேல்நடவடிக்கை தொடரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. குடிநீர் விநியோகப்பணியின் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 1778/2022/இ1 | 403)<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.30<br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் அம்மையப்பன் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் இதர மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியிலிருந்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மோட்டாரை இயக்க இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறையில் ஒப்பந்த அடிப்படையில் Out Source முறையில் பணியாளர்களை அமர்த்தி மேற்கொள்ள Lr.No.539/2005/F3 நாள்.28.01.2005ல் அனுமதிக்கப்பட்டுள்ளதன்படி பொதுப்பணிதுறையின் 2022-23 விலை விகிதத்தின்படி Electrician Grade – II நிலையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க மன்ற தீர்மான எண்.257 நாள்.08.03.2023ல் அனுமதிக்கப்பட்டு 30.09.2023 உடன் முடிவடைவதால் ஒப்பந்தப்புள்ளி கோர போதிய அவகாசம் இல்லாததால் 01.10.2023 முதல் 31.10.2023 வரை நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்து ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.778.00+18% ஜிஎஸ்டி உட்பட ரூ.918.04 வீதம் 6 நபர்கள் கொண்டு பணி மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ.170755/- மட்டும் (பிடித்தங்கள் உட்பட) இந்நகராட்சியின் குடிநீர் திட்டநிதி / பொதுநிதியிலிருந்து தொகை வழங்கிடவும் மேல்நடவடிக்கை தொடரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. குடிநீர் விநியோகப்பணியின் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடரப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண். 1778/2022/இ1 | 404)<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| பொருள் எண்.31<br>நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் 16.09.2023 ம் தேதிய காணொலி ஆய்வுக்கூட்ட அறிவுரையின் படி இந்நகராட்சிக்கு சொந்தமான வரியில்லா இனங்களில் தற்போது நடைமுறையில் உள்ள வரியில்லா இனங்களான ஒன்பதாண்டு குத்தகை மற்றும் மூன்றாண்டு குத்தகை இனங்கள் முறையற்ற மற்றும் நீக்கம் செய்ய வேண்டிய இனங்கள் குறித்து பட்டியல் பெறப்பட்டதில் ஒன்பதாண்டு குத்தகை/வாடகை இனங்கள் 538 எண்ணிக்கை மூன்றாண்டு குத்தகை இனங்கள் ஆண்டு குத்தகை இனங்கள் 25 எண்ணிக்கையாக உள்ளதை சரி செய்திட தெரிவிக்கப்பட்டதற்கிணங்க. இப்பொருள் தொடர்பாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் ஆய்வுக்கூட்டதிலும் முறையற்ற நிலையில் உள்ள குத்தகை இனங்களை குழு அமைத்து அறிக்கை முழு வடிவில் தயார் செய்து மன்றத்தில் பொருள் வைத்து UTIS ல் இருந்து செய்ய தெரிவிக்கப்பட்டதன் படி நகராமைப்பு அலுவலர் தலைமையில் நகரமைப்பு கட்டட ஆய்வாளர், வருவாய் ஆய்வாளர்கள், மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகியோர் கொண்டு குழு அமைக்கப்பட்டதில் ஒன்பதாண்டு குத்தகை/மாதவாடகை அடிப்படையிலுள்ள கடைகள் முறையாக 316 எண்ணிகைகள் நடப்பில் உள்ளது போக மீதமுள்ள 222 எண்ணிகையிலான முறையற்ற இரட்டிப்பாக உள்ள கடைகளையும், மூன்றாண்டு குத்தகை இனங்கள் முறையாக 12 எண்ணிகையிலான இனங்கள் நடப்பில் உள்ளது போக 13 எண்ணிக்கையிலான முறையற்ற இரட்டிப்பாக உள்ளவற்றை UTIS மென்பொருளில் இருந்தும் நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு.<br>**நீக்கம் செய்யப்பட வேண்டிய குத்தகை இனங்கள்** | 405)<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் வழங்கப்பட்டது. மாதாந்திர மற்றும் ஆண்டு குத்தகை இனங்கள் | திருவாரூர் நகராட்சியில் தற்போது நடவடிக்கையில் உள்ள கடைகள். | நீக்கம் செய்ய வேண்டிய கடைகள் |
|---|---|---|---|
| 1 | 538 (கடைகள்) | 316 | 222 |

நீக்கம் செய்ய வேண்டிய கடைகளின் விவரம்.

| வ.எண் | கடைகளின் விவரம் | எண்ணிக்கை | நீக்கம் செய்வதற்கான காரணம் |
|---|---|---|---|
| 1 | டோல்கேட் | 2 | தற்போது நடப்பில் இல்லை. |
| 2 | என்.ஜி.ஓ அலுவலகம் | 1 | தற்போது நடப்பில் இல்லை |
| 3 | தினசரி அங்கன கடைகள் | 193 | அலுவலக வசூல் – மார்ச் மாதம் 190 கடைகளுக்கும் ஆண்டு குத்தகை இனமாக ஒரே தனி கேட்பு உள்ளது. 3 கடைகள் இரட்டிபாக உள்ளது. |
| 4 | ஐ.பி கோயில் சன்னதி கடைகள் | 10 | கடை இடிக்கப்பட்டு விட்டது– |
| 5 | வேதாரண்யம் கூட்டு குடிநீர் திட்டிட வளாக கடைகள் | 2 | இரட்டிப்பு கேட்பாக உள்ளது. |
| 6 | ஐயூடிபி கடைகள் | 3 | இரட்டிப்பு கேட்பாக உள்ளது. |
| 7 | இரும்பு பெட்டிகடை | 1 | இரட்டிப்பு கேட்பாக உள்ளது. |
| | ஜீப்ளி மார்கெட் | 1 | இரட்டிப்பு கேட்பாக உள்ளது. |
| 8 | நகராட்சி தங்கும் விடுதி கடைகள் | 2 | இரட்டிப்பு கேட்பாக உள்ளது. |
| 9 | புதிய பேருந்து நிலைய கடை | 1 | இரட்டிப்பு கேட்பாக உள்ளது. |
| 10 | பழைய பேருந்து நிலைய கடை | 1 | இரட்டிப்பு கேட்பாக உள்ளது. |
| 11 | பூங்கா கடை | 1 | இரட்டிப்பு கேட்பாக உள்ளது. |
| 12 | தெற்குவீதி நூலககடை | 1 | இரட்டிப்பு கேட்பாக உள்ளது. |
| 13 | தெற்குவீதி பள்ளி எதிர்புறகடை | 1 | இரட்டிப்பு கேட்பாக உள்ளது. |
| 14 | தாழை மூ.கருணாநிதி வணிகவளாக கடை | 1 | இடிக்கப்பட்டு விட்டது. |
| 15 | வள்ளுவர் மார்கெட் கடை | 1 | இரட்டிப்பாக உள்ளது. |
| | | 222 | |

மூன்றாண்டு ஆண்டு குத்தகை

| வ.எண் | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் வழங்கப்பட்டது. மாதாந்திர மற்றும் ஆண்டு குத்தகை இனங்கள் | திருவாரூர் நகராட்சியில் தற்போது நடவடிக்கையில் உள்ள கடைகள். | நீக்கம் செய்ய வேண்டிய கடைகள் | |
|---|---|---|---|---|
| 1 | 25 | 14 | 11 | |

நீக்கம் செய்ய வேண்டிய கடைகளின் விவரம்.

| வ.எண் | கடைகளின் விவரம் | எண்ணிக்கை | நீக்கம் செய்வதற்கான காரணம் |
|---|---|---|---|
| 1 | தென்னை மரங்கள் | 1 | ஏலம் போகவில்லை |
| 2 | பேருந்து கட்டணம் வசூல் உரிமம் | 1 | இரட்டிப்பு (தற்போது பேருந்து நிலையம் வசூல் உரிமம் நடைமுறையில் உள்ளது. |
| 3 | பேருந்து நிலையம் சைக்கிள் பாதுகாப்பகம் வசூல் உரிமம் | 1 | தற்போது இல்லை. |
| 4 | சைக்கிள் பாதுகாப்பகம் பனகல் சாலை வசூல் உரிமம் | 1 | இடிக்கப்பட்டு விட்டது- |
| 5 | மீன் பிடி குத்தகை | 1 | தற்போது இல்லை |
| 6 | கட்டண கழிப்பறை வசூல் செய்யும் உரிமம். | 1 | இடிக்கப்பட்டு விட்டது. |
| 7 | கட்டண கழிப்பறை வசூல் செய்யும் உரிமம். | 1 | மறு ஏலம் விடப்பட்டு தற்போது நடைமுறையில் உள்ளது. |
| 8 | தஞ்சை சாலை கார் நிறுத்துமிடம். | 1 | இடிக்கப்பட்டு விட்டது. |
| 9 | தொலைக்காட்சி விளம்பரம் உரிமம் | 1 | நீண்ட காலமாக ஏலம் போகவில்லை. |
| 10 | எடை மேடை கட்டணம் வசூல் உரிமம். | 1 | தற்போது நடைமுறையில் இல்லை |
| 11 | ஆணையர் குடியிருப்பு | 1 | ஆண்டு குத்தகையில் உள்ளது மாதாந்திர வாடகை நிர்ணயம் செய்ய வேண்டும். |
| | | 11 | |

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. வரியில்லா இனங்களில் கேட்பு நிலுவை பட்டியலின் படி ஒன்பதாண்டு குத்தகை 316 எண்ணிகையிலான மாதவாடகை கடைகளை தவிர மீதமுள்ள 222 எண்ணிகை வேறுபாடாக முறையற்ற இரட்டிப்பாக உள்ள இனங்களையும், மூன்றாண்டு குத்தகை 14 எண்ணிக்கைகள் தவிர மீதமுள்ள 11 எண்ணிகைகள் வேறுபாடாக முறையற்ற இரட்டிப்பாக கேட்புகள் இல்லாதவைகளை UTIS மென்பொருளில் இருந்து நீக்கம் செய்ய மன்றம் வழங்கலாம்.
   ந.க.எண் 2506-1/2017/அ5

பொருள் எண்.32

"நடப்போம் நலம் பெறுவோம்" சுகாதார நடைபயிற்சி (Health Walk) எனும் திட்டத்தினை மாநிலம் முழுவதும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 04.11.2023 அன்று தொடங்கிவைக்கப்படவுள்ளது. எனவே திருவாரூர் மாவட்டத்தில் திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட கமலாலயம் வடகரை , வடக்கு வீதி, மேல வீதி மற்றும் கீழ வீதிகளில் "நடப்போம் நலம் பெறுவோம்" சுகாதார நடைபயிற்சி-க்காக நிரந்தரமான நினைவு வளைவு, நடைபாதை , இருக்கை வசதிகள் மற்றும் இதர வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளது.அதற்குண்டான செலவினம் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது.மேற்கண்ட பொருள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண். /2023/இ1

406)
பார்வையிட்டு
பதிவு செய்யப்பட்டது

| | |
|---|---|
| பொருள் எண்.33<br>திருவாரூர் நகராட்சியின் 2021-2022 ஆம் ஆண்டு தணிக்கையில் உள்ள 83 தணிக்கை தடை பத்திகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. | 407)<br>பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது |
| பொருள் எண்.34<br>5 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.பா.ஷகிலா பானு அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>எனது ஐந்தாவது வார்டுக்கு உட்பட்ட பகுதியான கேக்கரை அழகிய தமிழ் நகரில் கல்வெட்டு ஒன்று அமைத்து தர வேண்டும். அழகிய தமிழ் நகரில் பூங்காவிற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் சிறுவர் பூங்கா ஒன்று அமைத்து தர வேண்டும். கேக்கரை பிடாரி கோவில் தெருவில் பழுதடைந்த குளியலறை மற்றும் கழிவறையை இடித்துவிட்டு புதிதாக கட்டிதர வேண்டும். கேக்கரை பிடாரி கோவில் தெருவில் கல்வெட்டு ஒன்று அமைத்து தர வேண்டும். சூபி நகர் முதல் எம்,எம்,ஐ நகர் செல்லும் வழியிலும் தெற்கு தெரு, ரஹ்மானியா தெரு, பிடாரி கோவில் தெரு, மாரியம்மன் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் சாலை வசதி ஏற்படுத்தி தர வேண்டும். | 408)<br>தீர்மானிக்கப்பட்டது |

நாள் : 31.10.2023
இடம் : திருவாரூர்

ஒப்பம்/செ.புவனப்பிரியா செந்தில்
நகர்மன்ற தலைவர்
திருவாரூர் நகராட்சி